IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 35/2019

Deposition of Witness : PW 1

Name : அஞ்சலஷ்மி (வயது – தெரியாது)

Father's Name /W/o : க/பெ பிச்சைமணி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : சித்தேரி

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 23.09.2025.

**குறுக்கு விசாரணை**

1. எனக்கும் என் கணவருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 40 வருடத்திற்கு மேல் இருக்கும். எங்கே திருமணம் நடைபெற்றது என்றால் பெருமாள் ராஜா பேட்டை சத்திரத்தில் நடைபெற்றது. என் கணவர் என்னை பிரிந்து 35 வருடம் ஆகிஇருக்கும் என்றால் சரிதான். என் கணவர் எங்கே வேலை செய்தார் என்றால் சென்னையில் தொலைபேசி அலுவலகத்தில் வேலை செய்தார். எப்போது பணி ஓய்வு பெற்றார் என்றால் 5 வருடத்திற்கு முன்பு விருப்ப பணி ஓய்வு பெற்றார். என் கணவர் பெயரில் ஜீவனாம்சம் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன்.

2. என் மீது என் கணவர் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் தாக்கல் செய்தார். மேற்படி வழக்கில் எண் கணவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு தீர்ப்பு ஒருதலைபட்ச தீர்ப்பு என்பதால் ஒருதலைபட்ச தீர்ப்பை அகற்ற கோரி மனு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன்.